239

பதிவு எண்—

வெள்ளிக் கிழமையில் குருகுலக் கிளர்ச்சித் தாள்

முல்லைக்கொடி

தமிழ்க் கிழமை வெளியீடு :- இது, சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—௫	குருதலம், மாம்பாக்கம் ; விகிருதி, மார்கழி ; 5—1—51.	தளிர்—கஉ

16 JAN 1951

"குணநலம் சான்றோர் நலனே ; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

தொழிலும் துறவும்

—'ரமணர்'

மனிதன் அறிவால் அடைந்து நுகரத் தக்க உயர் நலன் அருள் ஞானமே. குடும்பியும், குடும்பி அல்லாதாரும் இந்த ஞானம் அடையமுடியும்.

மனம் அமைந்த நிலையே தனிமை. தனிமை, மனத்தின் பாங்கு. கடின விவகாரத்திடையிலும் முழு அமைதியுடன் ஒருவன் இருத்தலே தனித்திருத்தல் எனப்படும். காட்டில் இருந்து மனத்தைக் கட்ட வகையற்றிருப்பின், அது தனிமையில் இருப்பதாகச் சொல்ல முடியாது. வெளிச் செய்திகளிற் பற்றுள்ளவன், எங்கிருந்தாலும் தனிமையுறான். பற்றற்றவனே எப்பொழுதும் தனிமையில் இருப்பவன்.

மனவாக்கு கடந்த நிலையே மோனம். அதுவே மனத்தின் செயலின்றி நடைபெறும் தியானம். மனத்தை அடக்கிய நிலை தியானம். ஆழ்ந்த தியானமே நிலையுள்ள பேச்சு. அது வாக்கின் இடைவிடாப் பெருக்கு. அது, மேற்பேச்சால் தடையுறும். சொற்கள் அடங்கி மோனம் விளங்கும் ஓர் நிலையே ஞானத்தின் வரம்பு.

—உலகநாதர்.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. தனித் தாள்—ஓரணா

இவையும் நல்லவை

[மெய்கண்டான்]

மிகப் பழைய காலத்தில் மனிதன் மழைக்கும் வெயிலுக்கும் இடிக்கும், காற்றுக்கும் அஞ்சினான்.

இடைக்காலத்தில் வாளுக்கும் வேலுக்கும் அம்புக்கும் அஞ்சினான்.

சென்ற சில நூற்றாண்டுகளில் பீரங்கிக்கும் துப்பாக்கிக்கும் அஞ்சினான். இன்று மன்பதை அனைத்தும் அணுக்குண்டுக்கு அஞ்சுகிறது.

அச்சம், ஒரே கொடியில் பலரைத் தாக்கக்கூடிய, தப்பமுடியாத பேரளவுக்கு வளர்ந்துவிட்டது.

அச்சம் உண்டாவதற்கு வேறு காரணங்கள் இருப்பினும், இன்று, உலகம் இதுகாறும் கண்டிராத இப்பெரிய அச்சம் உண்டானதற்கு அடிப்படைக் காரணம் ஆசியாவின் வறுமையே என்று ஆராய்ந்து அறியலாம்.

செல்வர் எளியோரை வஞ்சித்து உறிஞ்சுதலும் தக்க காலங்களில் உதவாமையும் ஆகிய குற்றங்கள் நாளடைவில் இருவர்க்கும் தீங்குண்டாக்கும் என்பதனை இவ்வச்சம் காட்டுகிறது.

எனவே, போருக்குச் செலவிடுவதை வறுமையைப் போக்கப் பயன்படுத்துவதே நிலையான அமைதியை உண்டாக்கும் நல்வழியாகும்.

* *

பிறர் எச்சிலைக் காணும்போதே உடல் கூசுகிறது. ஏனெனில், அது, அழுக்கானது நோய்க்கிடமானது என்பதை நாம் அறிவோம். பிறர் விடும் காற்றும் எச்சிலைப் போலவே தீமை உடையது. எச்சிலால் உண்டாகும் தீமையைக் காட்டிலும் குறைந்ததன்று. அப்படியிருக்க, நெருக்கமான இடங்களில் ஒருவர் முகத்தில் மற்றவர் மூச்சு விடுவதும், தும்முவதும், சூடாக உள்ள பால் முதலிய பானங்களை வாயால் ஊதி ஆற வைப்பதும் எவ்வளவு தீய செயலென்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இதனினும் கொடுமையானது மற்றொன்றுண்டு. அது, பொதுவிடங்களையும், வண்டிகளையும் புகைமயமாக்குதல். நொடிக்கு நொடி கணக்கிலடங்கா அணுக்கள் இறப்பதனால் அழுக்குறும் குருதியைத் தூய்மைப்படுத்த, எரிக்கும் ஆற்றல் வாய்ந்த உயிர்வளி (பிராணவாயு) வேண்டியிருக்கிறது; அப்படியிருக்க, புகையிலை கொளுத்தப்படுவதனாலும், புகை நுரையீரலில் சென்று வருவதனாலும் தீமைகள் மலிந்துவரும் கரிமலத்தை உட்கொள்வது எவ்வளவு கொடுமை!

இந்த அடிப்படைத் தீமையை நிறுத்தப் பொது மக்களும் ஆட்சியாளரும் ஊக்கம் கொள்வது இயல்பே!

தொடர் வண்டிகளில் இக் குற்றத்தைக் குறைக்க ஆட்சியாளர் கீழ்வரும் சட்டத்தை இயற்றினர்.

"இந்திய ரயில்வேக்கள் சட்டத்தின்படி, கூடப் பயணம்செய்வோரின் சம்மதமில்லாமல் வண்டியில் புகை குடிப்பது ஒரு குற்றமாகும் என இதன்மூலம் எச்சரிக்கை செய்யப்படுகிறது. இவ் விதியின்படியே நடந்துகொள்ளுமாறு பயணம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்."

குறை செய்வோரை ஆட்சியாளர் கேட்டுக்கொள்ளும் முறை மிகவும் நாகரிகமுடையதுதான். ஆனால் பொதுமக்கள் இதனை உணரும் அளவுக்கு வளர்ந்துவிடவில்லை. எனவே, தொழிற்சாலைகளிலும், உந்து வண்டிகளிலும், இதனைத் தடுக்கும் முறைபோலவே, தொடர்வண்டிகளிலும், மற்றப் பொதுவிடங்களிலும் விலக்குதல் நல்லது.

அதோடு, பொதுமக்களின் உண்மையான ஒத்துழைப்பும் பெரிதும் வேண்டப்படுகிறது.

பார்வைக்கு முதன்மையற்றது போலத் தோன்றும் இதைப்போன்ற அடிப்படைத் தீமைகளை ஆட்சி என்பது நீக்கிக்கொண்டே வருமானால், மக்களுக்கு நோயற்ற வாழ்வைத் தருவதோடு, "நன்னடை நல்கும்" கடமையையும் செய்ததாகும்.

- - நிகழ்ச்சிகள் - -

நேபாள அரசைச் சார்ந்த இருவர் அந்நாட்டு அரசியல் வெளியீட்டின்படியுடன் 'இந்திய அரசினருடன் கலந்து பேச வந்திருக்கின்றனர்.

* *

சர்தார் பட்டேலின் மறைவு காரணமாக இந்திய அரசைச் சார்ந்த அமைச்சுப் பதவிகள் மாற்றியமைக்கப்பட்டன. அதன்படி ராஜாஜியும் திரு. கோபாலசுவாமி ஐயங்காரும் முறையே உள்நாட்டுப் பொறுப்பையும், சிற்றரசினர் பொறுப்பையும் கண்காணிப்பர்.

* *

ஜனவரி முதல் நாளிலிருந்து பற்றாக்குறைப் பகுதிகளில் கிராமப் பங்கீடும் கொள்முதலும் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

பருவமழை தவறியதன் விளைவாகப் பாவலாய்ப் பயிர்கள் தீய்ந்துபோன பகுதிகளில் நில வரித் தீர்வு செய்வதற்காக, 'கலெக்டர்'கள் சுற்றிப் பார்த்துத் தெரிவிக்கும்படி உத்திரவிடப்பட்டிருக்கின்றனர்

* *

'ஆஸ்திரேலிய' முதல்வர், 'காமன்வெல்த்' முதல்வர்கள் மாநாட்டுக்குப் போகும் வழியில் இந்தியத் தலைவர்களைக் கண்டு பேச வந்திருந்தார். அவ்வமயம் நேரு அவருக்கொரு விருந்தளித்துப் பேசுகையில், ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே பல துறைகளில் ஒத்தொற்றுமை இருக்கின்றதென்றும், வர வர ஆஸ்திரேலியாவில் தானும் ஆசியாவில் ஒரு பகுதியென்ற உணர்ச்சி வளர்ந்து வருகிறதென்றும், பற்பல துறைகளில் இரு நாடுகளும் சேர்ந்து உழைக்குமென்றும் கூறினார். 'காமன்வெல்த்' மாநாட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது, இம்மாநாடு உலகின் நெருக்கடியான நேரத்தில் கூடுகிறதென்றும், உலகத்தில் அமைதி நிலவுவதற்கான வழிகளை ஆராயுமென்றும் கூறினார்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்
தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி
வணங்குவாம்.

தூக்கு சீர்த்திருத் தொண்டத்
தொகைவிரி
வாக்கி னாற்சொல வல்ல
பிரான்பெரும்
பாக்கி யப்பய னப்பதி குன்றைவாழ்
சேக்கி ழாரடி சென்னி இருத் துவாம்.

பொன்னம்பலம், பெரிய திருக்கோயில்! கோயில் என்றாலும் போதும், அது பொன்னம்பலத்தைக் குறிக்கும். திருவளர் ஒளி அங்கே பெருவிளக்கத்துடன் எப்போதும் தாண்டவம் செய்து, உலகத்தை வாழ்வித்துக்கொண்டிருக்கின்றது. தில்லை என்றும் திருச்சிற்றம்பலம் என்றும் அதற்குப் பல பெயர் உண்டு.

தில்லையை அடைந்து அம்பலவாணரைத் தொழுது நலம் பெற்ற பேர்க்குக் கணக்கில்லை. சேவைசெய்த தொண்டர்க்கும் ஓர் அளவில்லை.

வாழ்க்கையின் உயர்ந்த எல்லையாகிய ஞானத்தின் ஞான நிலையை விளக்க எழுந்த மாணிக்க வாசகர் என்னும் சமய குரவர் முதல், எத்தகைய சூழ்நிலையிலும் இறையருள் பெறும் வாய்ப்புண்டு என்பதை உலகம் தெளிந்துகொள்ள ஓர் இலக்கியமாய் இலங்கிய திருநாளைப்போவார் என்னுந் திருத்தொண்டர் வரை, பலர் தில்லைப் பொன்னம்பலவன் ஆடுந் திருவருளிற் கலந்துள்ளனர்.

தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர், நாளும் இறைவன் சேவையில் திளைத்திருப்பவராய் விளங்குகின்றனர். திருத்தொண்டர் சேவை முழுதும் விரித்து, ஆசிரியர் சேக்கிழார் தில்லையில் தங்கிப் பெரிய புராணச் சேவையைச் செய்திருக்கின்றார்.

'பெரிய புராணம்' என்னும் இப் பெருநிதி, பெரியகோயில் ஆண்டவனாகிய தில்லைத் திருக்கூத்தனது

உ

பெரிய புராணம்

1

பெருஞ்செல்வமே! இது தமிழகத்துக்கு மட்டுந் தந்த செல்வமன்று; உலகு முழுவதற்கும் உதவிய செல்வம்.

நூலின் முதலிலும் இடையிலும் (திருஞானசம்பந்தர், புராணம், 216), கடைசியிலும் "உலகெலாம்" என்னும் பெருமொழி நின்றிருப்பதே இவ்வுண்மையைப் புலப்படுத்தும்.

பெரிய புராணம் அருளிச்செய்த ஆசிரியர் ஓர் உலகச் சான்றோர்! உலகு முழுவதையும் வேறற நினைந்த பெரியார்.

சேக்கிழார் தோன்றிய நாடு தொண்டைநாடு; ஊர், குன்றத்தூர்; குடி, சேக்கிழார் குடி. காலம் 12-ம் நூற்றாண்டின் முற்பகுதி. இற்றைக்கு 800-ஆண்டுகளுக்குமுன்.

நாவலந் தீவு என்னும் இந்தியாவில் பயிர் விளையும் பகுதிகள் உண்டு; பொன்னும் மணியும் கண்டெடுக்கும் தங்க வயல்களும் மலைத்திடர்களும் உண்டு; பேரளவில் வாணிபம் ஆற்றும் கடற்கரைத் துறைகளும் உண்டு; அறிவும் ஆற்றலும் மிகுந்த அரசமரபை வழிவழிப் பெருக்கிய தலைநகரங்களும் உண்டு; அணியுடை நெய்வோர் எழில்தரு சிற்பியர் முதலிய பல தொழில் வல்லோரையும், இன்னிசைப் பாணர் தலைக்கோல் கூத்தர் முதலிய பல கலை வல்லோரையும் என்றென்றுந் தோற்றுவிக்கும் இருக்கைகளும் உண்டு.

ஒரு வியப்பு! இப்படியே, தூய உணர்வமைந்த சான்றோரைத் தோற்றுவிக்கும் நாடே ஒன்று உண்டு இந்தியாவில்! இதற்கு அந்த நாடு எவ்வளவு பண்பு நிறைந்ததாய் இருக்க வேண்டும்! அறவோர் என்பதும், அந்தணர் என்பதும், துறவோர் என்பதும், முனிவர் என்பதும், ரிஷிகள் என்பதும், அடியார் என்பதும், அடிகள் என்பது மெல்லாம் சான்றோரைக் குறிக்கும் பெயர்களே. நல்லவர், பெரியோர், என்பதும் இவரையே. இத்தகைய மேலோரை என்றென்றும் பெருக்கிவரும் நாடுதான் நமது தொண்டை நன்னாடு.

"தீய வென்பன கனவிலும்
நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாட்
டியல்பு சொல் வரைத்தோ?"

என்று சேக்கிழார் பெருமானே இந்நாட்டின் சான்றாண்மைச் சிறப்பை உளங்குளிர ஓதுவர்.

சேக்கிழார் இந்நாட்டுச் சான்றோர். தூய சிந்தையராதலின், உலகு முழுதும் வேறற நினைந்த உலகப் பெரியாராயினர்.

இவர் தகுதி, இவரைச் சோழநாட்டுப் பேரரசின் முதலமைச்சர் ஆக்கியது. சான்றாண்மை நிறைந்தவரே அமைச்சுப் பதவியில் இருத்தற்குரியர். அப்போதுதான் மன்னனும் அவன் அரசும் நெறிதவறாது நடக்க ஏதுவாயிருக்கும். ஓர் எடுத்துக்காட்டுக் கூறலாம்.

சோழ மன்னனும் நாடும் அக்காலத்தில் இலக்கியச் சிறப்பு மிக்க 'சிந்தாமணி' என்னும் மிக அழகிய நூலில் ஈடுபட்டிருந்தனர். அந் நூல் முழுமுதற் கடவுட் கொள்கை இல்லாதது; மேலும், கற்பனை நூல்! சேக்கிழார் அதனை அறிந்து, கடவுட் கொள்கையும் வரலாற்றுண்மையும் இலக்கியக் கவினும் உடைய 'பெரிய புராணம்' என்னும் இப் பெரு நிதியத்தை அரசன் விரும்பியபடி அருள் உதவி கொண்டு தாமே இயற்றித் தந்து மன்னனையும் நாட்டையும் நன்னெறியில் உய்த்தார். இவ்வாறு ஒரு சொல் வழங்கிவருகின்றது.

இந்த அரும்பெருஞ் செயலால் நாடு நெறி தவறாதாயிற்று; சோழ நாடேயன்றி உலகு முழுதுந் திருந்த ஏதுவாயிற்று; சான்றோரே நாட்டுக்கு மெய் விளக்கந் தருவர் என்பது உறுதியாயிற்று.

தமிழ்த் தாய்.

“எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.”
—புறநானூறு.

கிளை	விகிருதி, மார்கழி	தளிர்
3	5-1-51 வெள்ளி	12

நூற்றாண்டின் - - - - - பிற்பாதி

1951-ம் ஆண்டு பிறந்தது! அதோடு, இருபதாம் நூற்றாண்டின் மறு பாதியும் தொடங்கிற்று.

ஆங்கில ஆண்டு உலகம் அறிந்த ஆண்டு; மேலும், வரலாறு இடங்கொண்ட ஆண்டு.

உலகத்தின் மாபெருந் தலைவருள் ஒருவரும், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து உலகு நீத்தவரும், சிறந்த சான்றோருமான இயேசு கிறித்துவின் விழாவை அடுத்து, அவர் நினைவாக வழங்கிவரும் ஆண்டு நிலைகள் இவை.

சான்றோர் விழாக் கொண்டாட்டம், அதனை அடுத்துத் தொடங்கும் ஆண்டில், மக்கள் நினைவையும் நடத்தையையும் புனிதப்படுத்தி அவர்கள் வாழ்வை மேன்மேலும் நல் அமைதியில் நற்கிளர்ச்சிகளில் உயர்த்திவர வேண்டும்.

உலகம் போர்க் குமுறலில் உள்ளது; ஆசியாவின் பசி நிலைக்கும் ஏனை நாடுகளின் வள நிமிரலுக்கும் முரண். இந்தியா இரண்டையும் ஒழுங்கு படுத்தி முரண் தவிர்க்க முயல்கின்றது!

இந்தியா இருபதாம் நூற்றாண்டின் முற்பாதி முழுதும் உரிமைக்காக முயன்று வந்தது! இறுதியில் அதன் எண்ணம் நிறைவேறிற்று. ‘நல்லோர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை’ என்றபடி, வேறு நாடுகள் சிலவற்றிற்கும் உரிமை கிடைத்தது.

இனி, இந்நூற்றாண்டின் பிற்பாதியில், வளம் உயரவேண்டும். எல்லா நாடுகளும் அதனதன் எல்லையில் நின்று, பொருள் நிரவலும் பொருட்பெருக்கமும் உண்டானால் மட்டுந்தான் போர்க் குமுறல் நீங்கி உலகம் அமைதியில் நிலைக்கமுடியும்.

உரிமைக்கு இரண்டு தலைமுறைகள் முயன்றபடி, வளத்துக்கும் இரண்டு தலைமுறைகள் இன்னுந் தீவிரமாக முயலவேண்டுமன்றோ?

“பசித்தோர் முகம் பார்” என்பது சான்றோர் பொன்மொழி! பொருட் பசியானாலும் அறிவுப் பசியானாலும் எல்லாம் பசியே; எல்லா வகையான பசிக்கும் தீர்வு காணவேண்டுவது கடமை.

உலக நாடுகள், பசித்தோர் முகம் பார்த்துத் தம் கடமைகளைச் செய்ய முற்படுமானால், அது, அடிப்படைக் காரணத்தோடு ஒட்டிய நன்முயற்சியாகும். இதற்கு அந்தந்த நாடுகளின் சான்றோர்களே முன்வந்து, நல்லுணர்ச்சிகளைப் பரவச் செய்யவேண்டும்.

இந்தியா, ஒரு சான்றாண்மை நாடு; இந் நிலையில் இதற்குப் பொறுப்பும் கடமையும் மிகுதி; இந்நூற்றாண்டின் முற்பாதி வெற்றியைப் போலவே இப் பிற்பாதியிலும் இந்தியா, இச் சிறப்பு வகையில் தன் எண்ணம் நிறைவேறப்பெற்று வெற்றி எய்துவதாக! அதற்கு, இப் புத்தாண்டில் உறுதி வித்திட்டு வீறு நடைக்குக் கால் கொள்க!

கலை விழா :

சென்னையில், அண்மையில் நடந்த கலைவிழாக்கள், சென்னை மாந்தர்க்கு ஊக்கம் ஊட்டின. அவற்றுள், தமிழிசைக் கழகம் தமிழிசையை உயிர்ப்பிக்க முயல்கின்றது. இது நல்ல முயற்சி.

தமிழிசை வழங்காத தமிழ்நாடு, மணமற்ற மலராகவே உள்ளது. இசை மீட்டும்போதும் இசைக்கு மொழியைக் கையாள நேரும்போதும் தமிழ் நாட்டில் தமிழ் முறையையும் தமிழ் மொழியையும் கையாளவேண்டுமென்பது தமிழ் நாட்டார் விருப்பம். இது, முறையே.

பொதுமக்களும் தமிழிசையை விரும்பும் கழகங்களும் ஆட்சியாளரும் ஒருங்கு ஊக்கங்கொண்டால், சில ஆண்டுகளிலேயே இதன் வெற்றியைக் காணலாம்.

பள்ளிகளில் தமிழிசையைப் பாடமாக்குதலும், பல்கலைக் கழகத்தில் தமிழிசை ஆராய்ச்சிகள் சிறக்கச் செய்தலும், தேவார இசைக் கழகங்களை ஊர்தோறும் வளர்த்தலும், ஓதுவார்க்குத் தமிழிசைப் பயிற்சிப் பள்ளிகள் நிறுவிப் பயில்வித்து அவ்வாறு பயின்றவர்க்குக் கோவில்களில் இடந் தருதலும், தமிழிசை அரங்குகளைப் பெருக்குதலும் போல்வன, தமிழிசைக்கு மேன்மேலும் ஆக்கந்தரும்.

இசையொடு தமிழும் செழித்தோங்கி மக்களுக்கு இன்பமும் அமைதியும் நல்குமாக!

யார் தலைவர்?

(J. M. நாயுடு B. A.)

(சான்றாண்மை வீரரையும் அருள் பற்றிய நாகரிகத்தையும் ஆசிரியர் இனிது விளக்குகின்றார்.)

மேனாட்டு நாகரிகம் தோன்றுவதற்குப் பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே கீழ்நாடுகளில் சிறந்த நாகரிக வாழ்க்கை நிலவி வந்திருக்கிறது.

சிறப்பாக, நம் நாட்டில் பொருள்களிடத்தும் உயிர்களிடத்தும் கடவுளின் பெருமையையே கண்டு மகிழ்ந்த நம் முன்னோர், பொருள்களைப் பெரிதும் பொருட்படுத்தாது, தெய்வத்தன்மை யமைந்த உயிர்களின் தன்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு தம் வாழ்க்கையை அமைத்தனர். அதன் வழித் தோன்றிய நாகரிகம், பொருள் நுகர்வைப் பொருட்படுத்தும் பிற நாகரிகம் போலாது, உயிரின் சிறப்பை ஒட்டியதாகத் தழைத்தோங்கி நிற்கின்றது. இப்போக்கு முற்றும் நீத்தார்க்கே சிறப்புடைய தென்பது உண்மை.

இவ் வுண்மைப் போக்கின் மாண்பை உணர்ந்து நம் நாட்டு மக்கள், நீத்தார்களையே தம் கூட்டத்துக்குத் தலைவர்களாக வைத்துப் போற்றி வந்திருக்கின்றனர்.

"சீரை தைஇய உடுக்கையர் * *
* * * கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் * *
துனியில் காட்சி முனிவர் முற்புக"

என்பது தமிழின் பழைய பத்துப் பாட்டுள் ஒன்றான திருமுருகாற்றுப் படை.

இன்றுங்கூட நம் நாட்டினரின் போற்றுதலுக்கும் வணக்கத்துக்கும் முதலிடம் பெறும் பெரியார், மேனாட்டில் முதன்மையில் வைக்கப்பெறும் பொருளாளரும் அதிகாரிகளும் அல்லர். நீத்தாரேயாவர்.[1]

இயேசு கிறித்து, கௌதம புத்தர் முதலிய உலகப் பெரியார் வரிசையில் வைத்து எண்ணப்படுபவர் 'மகாத்மா காந்தியடிகள்'. இவரே உரிமை இந்தியாவின் தந்தை.

உலகில் இதுவரை இல்லாதவாறு, அரசியல் இயக்கத்தில் தூய்மையைப் புகுத்தி, நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து முன்னேறிச் சென்று, இரத்தம் சிந்தாதவாறு அமைதியான மறுப்புத் திட்டத்தை மேற்கொண்டு, புரட்சி செய்து, அயலவர் ஆதிக்கத்தை முறியடித்து, வெற்றியடைந்த பெருமான்.

உண்மை, யாவர்க்கும் சம உரிமை, தற்சார்ந்தாரையும் பொதுமலரையும் பகைமை மேற்கொண்டாரையும் அன்புள்ளத்தோடு ஆதரித்தல், ஒறுத்தார்க்கும் அன்பு காட்டுதல், அச்சமின்மை, ஊக்கத்தைக் கைவிடாமை, மன்பதைப் பணி (சமூக சேவை), சிக்கனமான எளிய வாழ்க்கை முறை முதலியன, ஆன்ம வன்மையைப் பின்பற்றி வாழ்க்கையின் குறிக்கோளை அடைவதற்கு அவர் கடைப்பிடித்த முறைகள்.

வெற்றியைமட்டும் பொருட்படுத்தாது, அதனைப் பெறுதற்குக் கையாளும் முறைகள் தூய்மையுடையனவாய் இருத்தல் வேண்டும் என்பதையும் குறிக்கோளாகக் கொண்ட பேர் அருளாளர். உலகமெலாம் போற்றும் அறப்பெரியார்.

உலகில் எங்கும் கண்டறியாதவாறு, அருள் பற்றிய நாகரிகம் நிலவும் நாடு தந்த இப் பெரியார், மறத்தை அறவே தவிர்த்து, அறத்தை வைத்தே அரசியல் உரிமையை, வென்று மக்களுக்காக்கிய பெருமிதமுடையார். மறத்தை அறத்தால் வெல்லும் இவர் முறை, உலகுக்கே தலைசிறந்த வழிகாட்டியாகும்.

இவர் துறவி. கௌதம புத்தருக்குப் பின், கடந்த பல்லூழி காலமும் எத்தனையோ வல்லரசர் தோன்றி மறைந்தனர். ஆயினும், அவரொருவர்க்கும் காட்டாத மதிப்பும் வணக்கமும் காந்தியடிகளுக்கே காட்டினர் இந் நாட்டார். இது, அருள் பற்றிய நாகரிகத்தின் சிறப்பியல்பு!

இனி, பொறியின்பத்தை நாடும் காம வாழ்க்கையுங்கூட, நம் முன்னோர், தெய்வத்தை நாடிச்செல்லும் பான்மையில், அமைத்து வைத்துள்ளனர். 'களவெ'ன்னும் சொல், பிறர் அறியாது காதலர் இருவர் கூடும் ஒழுக்கம் என்பதைக் குறிக்குமாயினும், காதல் வயப்பட்டோர் தாம் பொறியின்பம் துய்ப்பதாகக் கருதியிருக்க, தெய்வத்தை அணுகும் வழிக்கு அவரைக் களவிச் செல்லும் ஒழுக்கம் என்பதையே சிறப்பாகக் குறிப்பதாகும்.

இனி, நம்மவர், இல்லற வாழ்க்கையையுங்கூட, அவ் வாழ்க்கையில் ஈடுபட்டோரது அன்பு நாளடைவில் தம் மக்களிடத்தும் உறவினரிடத்தும் சார்ந்தாரிடத்தும் பிற மக்களிடத்தும், மக்களல்லாத உயிர்களிடத்தும் பரவி அருளாகப் பழுத்து, நீத்தார் நிலையை அணுக வாய்ப்பளிக்கும் முறையில் அமைத்துள்ளனர்.

1. Always it is renunciation that wins the heart of India.
—Voice of Silent Millions
The Hindu 23-10-48.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை. 1

-அவள் வாழ்க்கை-

[அ. தி. வீரராகவன்]

(முன் தொடர்ச்சி).

3

சந்திரனைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு சென்ற பானு, தான் புறப்பட்ட மறுநாள் மாலை செங்கற்பட்டை அடைந்தாள். அன்றிரவு பெரிய நத்தத்தில் ஒரு பெரிய வீட்டின் முன்புறம் சென்று இரவு படுக்க இடம் கேட்டாள்.

அவ்வீட்டுக்காரருக்குக் காரணமில்லாமல் அக்குருடியிடம் அன்பு உண்டாகிவிட்டது. பானுவின் நிலை கண்டு இரக்கிய அப்பெரியவர், அவள் அங்கேயே தங்கியிருப்பதற்கும் தன் தொழிலை நடத்துவதற்தும் தக்க வசதிகள் வகுத்துக் கொடுத்தார். அவளை அன்போடு தன் மகளுக்குச் சமமாக நடத்தலானார்.

அந்த வீட்டில் அவர் மகள்போல் தோன்றிய பெண் ஒருத்தி இருந்தனள். அவளையும், அம்முதியவரையும் தவிர வீட்டில் வேறு யாரும் இல்லை. இடும் வேலைகளைச் செய்வதற்குப் பணியாட்கள் பலர் காத்துக்கிடந்தனர். மொத்தத்தில், அது, ஒரு பணக்காரக் குடும்பம். அப்பெண், பிள்ளைப் பேற்றுக்காகத் தாயகம் வந்திருப்பது போல் தோன்றியது.

அப்பெண்ணின் பெயர் பார்வதி. அவள் பானுவின் மேல் மிகவும் அன்பாக இருந்தாள். இருவரும் ஒரு வயிற்றிற் பிறந்த நிலையிற் பழகினார்கள். பார்வதி, பானுவைச் சிறிது நேரங்கூடப் பிரிய விடுவதில்லை. பானுவின் தொழிலுக்குத் தேவையான கோரைகளை நாளும் ஒழுங்காக வேலைக்காரர்கள் கொண்டுவந்தனர். குழந்தை சந்திரனும் பானுவும் துன்பத்தைச் சிறிது சிறிதாக மறந்து பொழுதைக் கழித்தனர்.

அன்று, பார்வதியின் கணவன் வருகின்றான் என்று வீட்டில் வேலைக்காரர்கள் பேசிக்கொண்டனர். பானு தன் பாட்டில் அறையில் வேலையில் ஈடுபட்டிருந்தாள். கார் ஒன்று வீட்டின் எதிரில் நின்றது. 'கார்' ஒலி கேட்டுச் சந்திரன் வீட்டிலிருந்து ஓடிவந்தான். காரிலிருந்து இறங்கிய வாலிபன் எதிரே ஓடிவந்த சந்திரனை அன்போடு தூக்கிக்கொண்டு உள்ளே சென்றான். சந்திரன் பார்வதியைக் கண்டதும், அம்மா! என்று அழைத்துக்கொண்டு அவளிடம் ஓடினான். பார்வதி மகிழ்ச்சி ததும்பும் முகத்துடன் கணவனைப் பின்பற்றிச் சென்றாள்.

சிறிது நேரம் சென்றதும் சந்திரன், பானுவிடம் யாரோ புதியவர் வந்திருப்பதாகவும், தன்னை அன்போடு தூக்கி அணைத்ததையும் சொன்னான். பார்வதியும் அவள் கணவனும் பக்கத்து அறையில் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சின் இடையில் சந்திரனைத் தன் நட்பினள் மகன் என்று மட்டும் கூறினாள்.

அன்று மாலை வெளியில் உலவச் சென்ற பார்வதியும் அவள் கணவனும் இருட்டியபின் திரும்பினர். தெருப்பக்கத்து அறையில் பாய் முடைந்துகொண்டிருந்த பானுவுக்கு, பேசிக்கொண்டு உட்புகுந்தவர்களின் குரல்களில் ஒன்று வேலனுடையது போல் தோன்றிற்று. காதின் வழிப் புகுந்த அக்குரல் அமிழ்தம் போல் உடல் முழுதும் பரவி இன்பம் மிகுவித்தது. பார்வதியை அழைத்துத் தகவல் கேட்க எண்ணினாள். அந்த ஆண்மகன் வேலனாக இருந்தால்?... பிறகு நினைக்கக்கூட அவளால் முடியவில்லை.

பார்வதி! என்று தன்னை அழைத்த பானுவின் பக்கம் திரும்பினாள், கணவனுடன் சென்ற அக்காரிகை. அவனும் உடன் திரும்பினான், உடனே அவன் ஆ! பானு! என்று அலறுவதற்கும், அத்தான்! தாங்கள் இங்கேயா இருக்கிறீர்கள் என்று கேட்பதற்கும் சரியாக இருந்தது.

பார்வதிக்கு ஒன்றும் புரியவில்லை. உலகமே சுழல்வதுபோன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது.

அன்னையைப் பார்க்க அன்று வந்த வேலன், அவள் மரணப்படுக்கையில், தனக்குத் தூரத்து உறவினர் ஒருவர் பெண்ணான பார்வதியை மணந்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டான். தான் ஏற்கனவே ஒரு பெண்ணை, அன்பின் உருவான ஆனால் கண்கள் இழந்த ஒருத்தியை மணந்துகொண்டதாகவும், அவளுக்கும் தனக்கும் தங்கச்சிலை போன்று அழகான சந்திரன் என்ற மகன் ஒருவன் உண்டு என்றும் வேலன் எவ்வளவோ கூறியும் அன்னையும் தந்தையும் ஒருமுகமாக அதனை மறுத்தனர்.

தந்தை தாமோதரனார், வேலன் இளம் வயதில் இருந்த பிடிவாதக் குணத்தை விட்டுவிட்டுப் பார்வதியை மணந்துகொள்ள வேண்டும் என்று கூறினார். வேறுவழி தோன்றாததால் பார்வதியை மணந்து கொண்டான். தாமோதரனார் சென்னையில் பல துணிக்கடைகளுக்கு உரிமையாளர். கீழ்ப்பாக்கத்தில் ஓர் அழகிய 'பங்களா' அவருக்கு இருந்தது.

வேலனுக்கு மணம் ஆனதும் உள்ளத்தில் அமைதியோடு அவன் அன்னை இறந்துவிட்டாள். இரண்டாண்டுகள் கழித்துத் தந்தையாரும் காய்ச்சல் கண்டு உயிர் நீத்தார். வேலன் பெருஞ்செல்வத்துக்குப் பொறுப்பாளியானான். பானுவைத் தன் இருப்பிடம் அழைத்து வந்தபின் பார்வதிக்கு அறிமுகப்படுத்தலாம் என்று எண்ணி, ஒருநாள் காரில் அவ்வூருக்குச் சென்றான். பானு வீட்டை விற்றுவிட்டு மகனுடன் சென்றுவிட்டதை யறிந்து வேதனை யடைந்து திரும்பினான்.

சென்ற கால நிகழ்ச்சிகள் அவன் உள்ளத்தில் பெரும் புயலை உண்

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

டாக்கிவிட்டன. பானு! என் அன்பே! நான் ஒரு பெரும் பாவி. காலமும் சூழ்நிலையும் பின்னிய வலையில் சிக்கிய நான் தப்ப முடியாமல் உனக்குப் பெரும் தீங்கு விளைத்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு என்று அவளை நெருங்கி அன்புடன் அவள் தலையை வருடினான். பானு ஒன்றும் பேச வில்லை. கண்களில் தாரை தாரை யாகக் கண்ணீர் பெருகியது. உதடு கள் 'அத்தான்' என்ற சொல்லை மாத் திரம் முணு முணுத்தன. குழந்தை சந்திரன் இக்காட்சியைக் கண்டு வியப்போடு ஒன்றும் தோன்றாமல் தன் அன்னையையும் வேலனையும் மாறி மாறிப் பார்த்துக்கொண் டிருந்தான்.

அங்கு வந்த பார்வதியின் தந்தை யார் இக்காட்சிகளைக் கண்டார். வியப்பு மேலீட்டால் சிறிது நெருங்கி வந்தார். சிறிது உற்றுக்கவனித்தார். நெடுநாள் மறைந்திருந்த ஐயமொன்று உள்ளத்தில் தலைதூக்கியது. மின்சார விளக்கின் ஒளியில் பானுவைக் கவ னித்தார். கழுத்தில் இருந்த 'மச்சம்' ஒன்று அவர் கண்ணில் விழுந்தது. ஆ! என்று அலறினார். எல்லோரும் முதியவர் பக்கம் திரும்பினர்.

'இரேவதி' என்ற பெண் பார்வ திக்கு முன்னால் தமக்கு உண்டு என் றும். அவளுக்குப் பிறவியிலேயே இரண்டு கண்களும் தெரியா வென் றும், ஒருநாள் இரவு நாடகம் பார்த்து விட்டு வந் கொண்டிருக்கும்போது இரேவதி தப்பிவிட்டாள் என்றும் அவளுக்குக் கழுத்தில் ஒரு நீண்ட மச்சம உண்டு என்றும்; அம்மச்சத்தி னால் தான் தன் மகளை இப்போது அறிய முடிந்தது என்றும் கிழவர் விளக்கம் கூறினார்.

எல்லோரும் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர். எல்லோர் குரலும் ஒருங்கே ஒலித்தன.

'அப்பா!' 'அக்கா!'

'பானு!' 'அம்மா!'

—: முற்றும் :—

தமிழ்த் தாய்த் தசாங்கம்

(நலங்கிள்ளி)

1. பெயர்

ஏரார் இளங்கிளியே! எங்கள் தனிமொழியின்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்—பார்புகழும்
மாணல் குறள்பயந்த மங்கைத் திருநாமம்
தேனமிழ்தச் செந்தமிழே யாம்.

2. நாடு

ஏதமிலா இன்சொல் மரகதமே! எந்தமிழின்
கீதமிசை நாடென், கிளத்துவாய்—கோதில்சீர்
வேங்கடமுந் தென்குமரி மேல்கீழ் கடல்சூழ்ந்த
தேங்குபுகழ் செந்தமிழ்நா டே.

3. ஊர்

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய்! தமிழன்னை
கோதில் வதியுமூர் கூறிடாய்—நீதிநிறை
உள்ளம் தமிழன்பால் ஓங்க அதற்குழைக்கும்
தெள்ளுதமி ழர்மனமே செப்பு.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

சென்ற மாத இறுதியில் கல்கத் தாவில் பாரதித் தமிழ்ச்சங்கம், பாரதி யின் பிறந்த நாளையும், பாரதி மாநாட் டையும் கொண்டாடியது. விழாவில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட பேராசிரியர் சீனிவாச ராகவன், "தமிழ் நாட்டின் எல்லை வடவேங்க டம் தென்குமரி யென்று பாரதியார் கூறிப்போந்தார். அது நிலப் பரப்பை மட்டும் குறிக்கிறது. எங்கெங்குத் தமிழ் உள்ளம் துடித்தெழுகின்றதோ, எங்கெங்குத் தமிழ் பேசப்படுகின் றதோ, அவையெல்லாம் தெய்வத் தமிழ் நாட்டைச் சேர்ந்தவையே" என்று குறிப்பிட்டார்.

'முல்லைக் கொடி'க்கு
எல்லா இடங்களிலும்
விற்பனையாளர் தேவை.

கைத்தறி ஆடைகள்
வணிகக் குறி !
—N. K. M.—
தங்கநாடா
(பதிவு)
எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகை களிற் கிடைக்கும்.
நூலாடைகட்டும்
பட்டாடைகட்டும்
நம்பிக்கையான இடம் :
கருப்பண முதலியார்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

“முல்லைக் கொடி.”

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில்,

எல்லார்க்கும் புரியும் வகையில்,

உரிய விலையில்,

வாழ்வின் பலதுறைக் கருத்தில்,

சீர்திருத்த முறையில்,

சிறந்த ஆக்கப் பணி உருவில்

வெள்ளிக் கிழமைதோறும்

வெளிவரும்

ஒரு பெருந்தன்மையான

உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4

வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

1. கார்த்திகை விழா முதல் (24-11-50) ‘முல்லைக் கொடி’ புது ஒளி பெற்று வெளிவருகின்றது. ஆண்டுக் கையொப்பமாகச் சேர்வோர், ஒரு மாதத்துக்குள் (பொங்கல் நாளுக்குள்) விரைவிற் சேர்தல் வேண்டும். அவர்க்கு இதழ்கள் குறைவின்றிக் கிடைக்கும்.

காலந்தாழ்ந்து சேர்வோர், சேரும் நாளிலிருந்து வெளிவரும் எனை இதழ்கள் மட்டுமே கிடைக்கப் பெறுவர்.

2. குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ. 3 மட்டும்.

3. ‘முல்லைக் கொடிக்’ கையொப்பங்கள் ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசிக் கலைமகள் விழாவுடன் நிறைவேறும்.

குருகுலம், மாம்பாக்கம்;

(வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி)

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

செய்கை நிலையம்.

நாட்டு மக்கள் ‘மொழி’ ‘கலை’ ‘தொழில்’ ‘அருள்’

‘பணி’ என்னும் ஐவகை வாழ்வியல்

திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு

முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு அச்சகம்,

நூற்பதிப்பு, இதழ்ப் பதிப்பு, படிப்பகம்,

தொழிலகம், அருள் நிலையம் முதலிய

பல்வகை உறுப்புகளுடன் பணி புரிவது.

வாழி, மன்பதை!

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர் : தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.).